செ.வெ.எண்.336/2009/செமதொஅ நாள்:09.10.2009

**காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புட்குழி அரசு மேல்நிலைப்பள்ளியில் சத்துணவு கூடம், நூலகம், சிமெண்ட் சாலை, கூடுதல் பள்ளி கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புட்குழி ஊராட்சியில் பாலுசெட்டி சத்திரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கூடுதல் பள்ளிக் கட்டடம், சத்துணவுக் கூடம், நூலக கட்டடம், சிமெண்ட் சாலை, ஆழ்குழாய் கிணறு ஆகியவற்றை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றியதாவது,

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் அவர்கள் இந்த பள்ளியில் படித்துள்ளார் என்பது அறிந்து பெருமைபடுகிறேன். இந்த பள்ளிக்கு பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை செய்துள்ளார். இந்த பள்ளியில் நபார்டு மூலம் ரூ.1.10 கோடியில் 20 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக ரூ.9400 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார். ஏழை-எளிய மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க இலவச பேருந்து பயண அட்டை, இலவச சீருடை, சத்துணவில் வாரம் 3 முட்டை, கல்வி கட்டணம் ரத்து, இலவச சைக்கிள், இலவச பாடபுத்தகம் ஆகியவை உதவிகளை வழங்கி வருகிறார். மாணவ செல்வங்களாகிய நீங்கள் சிறப்பாக படித்து பொறியாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ விளங்க வேண்டும். அடுத்த ஆண்டு முதல் 1ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை சமசீர்கல்வி முறை கொண்டுவரப்பட உள்ளது. முன்பு 100 ஆசிரியர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்து வந்தது. தற்போது முதல்வர் அவர்கள் 40 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற நிலையை உருவாக்கி உள்ளார்.ட 44,300 ஆசிரியர்கள் புதியதாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த ஆண்டு 12 ஆயிரம் ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பட உள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளில் 69 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 18 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே கல்வித்துறைக்காக 2 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது தமிழகத்தில் தான். திருப்புட்குழி மாணவர்கள் சென்ற ஆண்டு 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகளில் 58 சதவீதம் தேர்ச்சிப் பெற்றுள்ளீர்கள். இதுமிகவும் குறைவு ஆகும். தனியார் பள்ளிக்கு நிகராக அரசுப் பள்ளிகள் விளங்குகின்றன. எனவே, இங்கு படிக்கின்ற மாணவ-மாணவிகள் சிறப்பாக படித்து 100 சதவீத தேர்ச்சி பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இங்கு கலையரங்கம் தேவை என கோரிக்கை வைத்துள்ளீர்கள். விரைவில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறினார்.

இந்த விழாவில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர் இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியகுழுத் தலைவர் திரு.பி.எம்.குமார் முன்னிலையுரையாற்றினார். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியை திருமதி.வி.பி.பரமேஸ்வரி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் திரு.ஆ.அருணாச்சலம் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் பள்ளி ஆய்வாளர் திரு.சுந்தரவதனம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.கோ.சுந்தரம், திரு.எ.அசோகன், ஒன்றியக்குழுத் உறுப்பினர் திரு.பி.என்.ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கே.எம்.ரகுராமன், கே.குமாரசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் டி.எம்.செல்வராஜ், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், பொருளாளர், துணைத்தலைவர், கல்விக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.